(முற்பகல் 10—10)

(2) ஒழுங்குப்பிரச்னைகள்—தொடர்ச்சி.

(இ) ஓர் உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டின்மீது எந்த விதியின் கீழ் பேரவைத் தலைவரால் விளக்கம் கேட்கப்பட்டது என்பது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தாங்கள் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருப்பதாக தெரியப்படுத்தினீர்கள். சட்ட மன்ற விதிகளில் எந்த விதியின் கீழ் இந்த விளக்கத்தை தாங்கள் கேட்டிருக்கிறீர்கள் ? சட்ட மன்ற விதிகளில் எந்த விதிகள் மூலம் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். மேலும், இந்தப் பிரச்சனை கிளப்பப்பட்டு பல நாட்கள் ஆகியும், இப்போது, போலீஸ் மான்யம் வரும்போது இந்த விளக்கம் கேட்டிருப்பதின் உள்நோக்கம் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினாரோ அந்த விதியின் கீழ் தான். எந்த விதியின் கீழும் உறுப்பினர் அவர்கள் அப்படி பேச முடியாது, என்பதையும் நான் நினைவுபடுத்துகின்றேன். நான் கடிதம் எழுதியிருப்பது எந்த விதியின் கீழும் அல்ல. கனம் உறுப்பினர் அவர்கள் பேசியதின் அடிப்படையில்தான் கடிதம் எழுதினேனே தவிர வேறு எந்த விதியின் அடிப்படையிலும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) கோவையில் நடைபெற்ற ஜனதா மாநாட்டிற்கு லாரிகளில் பொதுமக்களை ஏற்றிச் சென்றது குறித்து.

திரு. ரெ. வீ. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கூட்டத்திற்கும் மாநாட்டுக்கும் லாரிகளில் பொதுமக்களை ஏற்றிச் செல்லக்கூடாது என்று பொது உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அண்மையில் கோவையில் நடைபெற்ற ஜனதா மாநாட்டிற்கு ஏராளமான லாரிகளில் பொதுமக்களை ஏற்றிக்கொண்டுப் போயிருக்கிறார்கள். அது சரிதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றியெல்லாம் மான்யக் கோரிக்கையின் மீது பேசிக்கொள்ளலாம். இப்போது இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.